Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா: 4·00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02   பெப்ரவரி   (21 02 1991)   வியாழக்கிழமை   [illegible] 03

## மன்னாரில் விளையும் உப்பிற்கு புத்தளத்தில் பணம் செலுத்தவும்

(மன்னார்)

மன்னார் தீவுப்பகுதியில் விளையும் உப்பைப் பெறுவதற்கு புத்தளத்தில் உள்ள உப்புக் கூட்டுத்தாபனத்திடம் பணம்செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்று வருமாறு மன்னார் மக்களுக்கு இராணுவம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுகாலவரை மன்னார் அரச அதிபர் அலுவலகத்திலேயே பணம் செலுத்தி உப்பைப் பெற்றுவந்தனர் மன்னார் மக்கள் என்பது 4 ஆம் பக்கம் பார்க்க,

## வங்காலை இராணுவத்தினரால்

# உப அதிபர் சுட்டுக் கொலை

# அதிபர், ஆசிரியர்கள் கைது

(மன்னார்)

வங்காலை என்னும் இடத்தில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அதிபர், உப அதிபர் உட்பட ஐந்து பாடசாலை ஆசிரியர்களை கைதுசெய்து இருவரை சுட்டுப்படுகொலை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார்த்தீவிலிருந்து வந்து கொண்டிருந்த இவர்களைவழி மறித்த இராணுவத்தினர் கைது செய்தனர். இவர்களில் முருங்கன் ம. ம. வித்தியாலய உப அதிபரான எஸ். சி. ஜோசப்பிள்ளை, திரு நவரட்ணம் ஆகியோரை இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

திரு. செபமாலை, திரு விம்போடியல் குரூஸ், புதுக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபரான திரு. ஜஸ்டின் ஆகியோரை இராணுவத்தினர் கைதுசெய்து சென்றனர். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

### இணக்கமன்று அமைப்பு, ஒழுங்கு விதிகள்

(நமது நிருபர்)

"தமிழீழ இணக்க மன்று அமைப்பு விதியும், ஒழுங்கு விதிகளும்" என்ற கைநூல் தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவின் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலை வாங்க விரும்பும் பொது மக்கள் தங்கள் பகுதி இணக்க மன்றுச் செயலாளர் பொறுப்பாளர்பிரிவு நீதி, நிர்வாகப் பொறுப்பாளர், மாவட்ட நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாமென தமிழீழ நீதி, நிர்வாகப் பிரிவினரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

### குழந்தைகள் தடுப்பூசிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள், ஊசல் என்பன யாழ் போதனா வைத்தியசாலைக்கு கப்பலில் வந்து சேர்ந்துள்ளதாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (மு)

### வீரத்தாய்

(புங்குடுதீவு)

விடுதலைப் போராட்டத்திற்குத் தனது மகனை ஒப்படைத்துள்ளார் ஒரு தாய். இச்சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடுவதற்காக தானே தனது மகனைக் கொண்டுவந்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்த பிரஸ்தாபவீரத்தாய் புங்குடுதீவுமூதலாம் வட்டாரத்தைச்சேர்ந்த திருமதி கதிரேச கனகம்மா என்பவராவார். (22)

### திருமலையில் தமிழர் வயலுக்கு சிறீலங்கா இராணுவத்தினர் தீ

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள பூமரத்தடி சேனை என்ற இடத்தில் தமிழ் விவசாயிகளின் நெல்வயல்களை சிறிலங்கா இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளனர்

கடந்த சனிக்கிழமை இப்பகுதியில் உள்ள சுமார் 10ஏக்கர் நெல்வயல்களை இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளதுடன் வயலில் வேலைசெய்து கொண்டுநின்ற 6 விவசாயிகளைக் கைதுசெய்து அடித்துச் சித்திரவதை செய்த பின்னர் விடுதலை செய்தனர்.

மேலும் நேற்று முன்தினம் அலிபொழுவ, கல்லாறு ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் வெருகல் நச்சிலம்பத்தை ஆகிய இருஇடங்களிலும் புதிய இராணுவ முகாம்களை அமைத்துள்ளதுடன் வெருகல் அணைக்கட்டிலும் காவல் அரணை அமைத்துள்ளனர்.

### மன்னார் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கொண்டச்சி சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிராக கடந்த 17ஆம் திகதி விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட வெற்றிகரமான தாக்குதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஐந்து மாவீரர்களின் பூதவுடல்கள் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து உணர்ச்சி பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

பூநகரி, நானாட்டான் ஆகிய (4 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணிவெடியை அழிக்க முயன்ற மூன்றுபடை பலி

வடக்கு, கிழக்குப் பகுதிக... வடக்கு முல்லைத்தீவுப் பகு...

### ஓலைத்தொடுவாயில் படை பலி ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஓலைத்தொடுவாய் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 11.15 மணியளவில் பேசாலை இராணுவ முகாமில் இருந்து வெளியேறி (4 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கிரஸ் ஆட்சியமைக்க ஜனாதிபதி அங்கீகரிக்க கூடாது

எதிர்க் கட்சிகள் வேண்டுகோள்

இந்திரா காங்கிரஸ் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அனுமதி அளிக்கக் கூடாது என ஜனதா தளக் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜனதா தள எஸ்ஸிற்கு இதுவரை அளித்து வந்த ஆதரவை விலக்கி தம் அரசாங்கம் ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் முனைந்து வருகின்றது எனவும், அதற்கு ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் அனுமதியளிக்கக் கூடாது எனவும் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய ஜனதாதளக் கட்சித் தலைவர்கள் எஸ். ஆர். பொம்மை, பேராசிரி...

### வீரவணக்கம்

ஆனந்தராஜ்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த 13 ஆம் திகதி ஏற்பட்ட மோதலில் ஆனந்தராஜ் என்ற போராளியும் வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தடுப்பூசிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள், ஊசல் என்பன யாழ் போதனா வைத்தியசாலைக்கு கப்பலில் வந்து சேர்ந்துள்ளதாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (மு)

## வீரத்தாய்

(புங்குடுதீவு)

விடுதலைப் போராட்டத்திற்குத் தனது மகனை ஒப்படைத்துள்ளார் ஒரு தாய். இச்சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடுவதற்காக தானே தனது மகனைக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்த பிரஸ்தாபவீரத்தாய் புங்குடுதீவு மூலம் வட்டாரத்தைச்சேர்ந்த திருமதி கதிரேசு கனகம்மா என்பவராவார். (22)

அதிபர், உபஅதிபர் உட்பட ஐந்து பாடசாலை ஆசிரியர்களை கைதுசெய்து இருவரை சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார்த்தீவிலிருந்து வந்து கொண்டிருந்த இவர்களைவழி மறித்த இராணுவத்தினர் கைது செய்தனர். இவர்களில் முருங்கன் ம.ம. வித்தியாலய உப அதிபரான எஸ். சி. ஜோசப்பிள்ளை, திரு நவரட்ணம் ஆகியோரை இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

திரு. சேபமாலை, திரு விம்போடியல் குரூஸ், புதுக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபரான திரு. ஜஸ்டின் ஆகியோரை இராணுவத்தினர் கைதுசெய்து சென்றனர். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

# திருமலையில் தமிழர் வயலுக்கு சிறீலங்கா இராணுவத்தினர் தீ

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள பூமரத்தடி சேனை என்ற இடத்தில் தமிழ் விவசாயிகளின் நெல்வயல்களை சிறிலங்கா இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளனர்

கடந்த சனிக்கிழமை இப்பகுதியில் உள்ள சுமார் 10ஏக்கர் நெல்வயல்களை இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளனர் அடன் வயலில் வேலைசெய்து கொண்டுநின்ற 6 விவசாயிகளைக் கைதுசெய்து அடித்துச் சித்திரவதை செய்த பின்னர் விடுதலை செய்தனர்.

மேலும் நேற்று முன்தினம் அலிபொமுவ, கல்லாறு ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் வெருகல் ஈச்சிலம்பற்றை ஆகிய இருஇடங்களிலும் புதிய இராணுவ முகாம்களை அமைத்துள்ளதுடன் வெருகல் அணைக்கட்டிலும் காவல் அரணை அமைத்துள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில்

# ஆயிரக்கணக்கில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சௌண்டச்சி சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிராக கடந்த17ஆம் திகதி விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட வெற்றிகரமான தாக்குதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஐந்து மாவீரர்களின் பூதவுடல்கள் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து உணர்ச்சி பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

பூநகரி,நானாட்டான் ஆகிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஓலைத்தொடுவாய் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலை புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 11.15 மணியளவில பேசாலை இராணுவ முகாமில் இருந்து வெளியேறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் ஆட்சியமைக்க ஜனாதிபதி அங்கீகரிக்க கூடாது

## எதிர்க் கட்சிகள் வேண்டுகோள்

இந்திரா காங்கிரஸ் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அனுமதி அளிக்கக் கூடாது என ஜனதா தளக் கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜனதா தள எஸ்ஸிற்கு இதுவரை அளித்து வந்த ஆதரவை விலக்கி தம் அரசாங்கம் ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் முனைந்து வருகின்றது எனவும், அதற்கு ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் அனுமதியளிக்கக் கூடாது எனவும் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய ஜனதாதளக் கட்சித் தலைவர்கள் எஸ். ஆர். பொம்மை, பேராசிரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ஆனந்தராஜ்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த 18 ஆம் திகதி ஏற்பட்ட மோதலில் ஆனந்தராஜ் என்ற போராளியும் வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# கண்ணிவெடியை அழிக்க முயன்ற மூன்றுபடை பலி

வடக்கு. கிழக்குப் பகுதியில் நேற்றையதினம் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததாக பாதுகாப்புப் படைத் தலைமையலுவலகம் கொழும்பில் அறிவித்துள்ளது.

வடக்கு முல்லைத்தீவுப் பகுதியில் கண்ணிவெடி ஒன்றை செயலிழக்கச் செய்யும் முயற்சியில் இந்த இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

# யூன்மாதத்திற்குள் நெருக்கடிகள் தீர்த்துவிட நடவடிக்கை

(கொழும்பு)

-ரஞ்சன்

"வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவும் நெருக்கடிகளை வரும் யூன் மாதத்திற்குள் முடித்துவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா அறிவித்துள்ளார்

நாரன்பிட்டியில் நடந்த குவாவெண்ண ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோது இவ்வாறு தெரிவித்தார்.

# நிவாரணக் கொடுப்பனவுகள் மீண்டும் வழங்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் நாலாயிரம் ரூபா, மீளக் குடியமர்தல் இரண்டாம் கட்ட நிவாரணம் ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளை பெறத் தவறியோருக்கு மீண்டும் வழங்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திரு கணேசமூர்த்தி நேற்று ஈழநாதத்திற்குத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை. நல்லூர். கந்தாமடம் வண்ணார்பண்ணை

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம், ஊர்காவற்படைமீது மட்டக்களப்பில் தாக்குதல்

## பலர் காயம்; ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேடுதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை திருக்கோணமடு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கதிரவெளி, மாங்கேணி ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தியபோது ஆட்டாளைச்சேனை வீதியில் மாணிக்கம் என்னும் இடத்தில்வைத்து விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல்நடத்தியதில் நான்கு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

மேலும் நேற்று விடுதலைப் புலிகளால் ஏறாவூரில் உள்ள முஸ்லிம் ஊர்காவற்படையினரின் காவல் அரண் ஒன்றின் மீது கடும்தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 303ரக துப்பாக்கி ஒன்று, மகசீன் 1, ரவைகள் 69 ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது. ஊர்காவற் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து எதுவும் தெரியவில்லை.

## இராசலிங்கம் காலமானார்

(நமது நிருபர்)

உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. இராசலிங்கம் காலமானார். இவர் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டவர் ஆவார்.

# வழக்கறிஞர் ஆஜராவதை தடை செய்ய வேண்டாம்

(சென்னை)

தமிழகத்தில் சமீபகாலத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்காக வழக்கறிஞர் ஆஜராவதைத் தடைசெய்ய வேண்டாமென மாநில அரசாங்கத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் பணிப்புரை ஒன்றை வழங்கி உள்ளது.

வழக்கறிஞர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு ஒன்றை தீர்வு செய்த உயர்நீதிமன்ற நீதிபதி கே. எஸ் பக்தவத்சலம் வழக்கறிஞர்கள் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டிருக்கும் ஒழுக்கக் கோவைக்கேற்பதனது தொழிலைச் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமையுண்டு என்றார்.

சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## நீடிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு இவ்வாண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கல்வி அமைச்சைக் கோரியுள்ளார். (மு)

## ஷெல்தாக்கு தீவிரம்

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து தற்போது புங்குடுதீவுப்பகுதியை நோக்கி அடிக்கடி நடாத்தப்படும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**போட்டோஸ்ரட்**

போட்டோ ஸ்ரட் பிரதிகளையும், ரோனியோ பிரதிகளையும், தமிழ், ஆங்கில ரைப்பின் வேலைகளையும், உடனடியாகப் பெற்றுக் கொள்ள "இளீன் கட" 839, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B1994)

**விற்பனையாகிறது**

அல்காக்சனும் பங்சகக்களும்- ஓர் அறிமுகம், தாவரவியல் மாணவர்களின் துணைநூல். ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph.D. B Sc விலை ரூபா 50/- சொற்ப பிரதிகள் மட்டும் உள்ளன. விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B-2027)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 | | 26 |
| — | | — |
| 08 |  | 01 |
| — | | — |
| 1929 | | 1991 |

### அமரர் சி. மாணிக்கம்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால உறுப்பினரும், வடமராட்சி பிரிவு கட்டைவேலிக் கிராம சபையின் முன்னாள் தலைவரும், அதன் நீண்டகால உறுப்பினரும், பல்வேறு வெகுசனத் தாபனங்களின் உறுப்பினரும், திரு. சிவசிதம்பரம் (தபால், தொலைத் தொடர்புத் திணைக்களம், வவுனியா) அவர்களின் தகப்பனாரும் ஆகிய அல்வாய் மேற்கு, திக்கம் சி. மாணிக்கம் (எஸ். எம்.) அவர்கள் கடந்த 26-1-91 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார். அவருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து உதவிய வவுனியாப் பகுதி தபால் தொலைத்தொடர்புத் திணைக்களப் பணியாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**அந்தியேட்டிக் கிரியைகள்**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 24-02-1991 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். சகலரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

திக்கம்,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

நண்பர்களும்,
குடும்பத்தினரும்.
(R/1112)

## வட ஈழம் சிகை அலங்காரிப்பாளர் சங்க முக்கிய அறிவித்தல்

எமது இளைச் சங்கங்கள் தன்னிச்சையாக அங்கத்தவர்களிடம் சந்தாப் பணம் வருலிப்பதில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

## 100 ஆம் நாள் நினைவஞ்சலி

| தமிழ் மடியில் | | ஈழ மண்ணில் |
|---|---|---|
| 27 | | 14 |
| 06 |  | 11 |
| 1966 | | 1990 |

நாராயணசாமி - செல்வக்கிருஷ்ணன்

### (செல்வம், கண்ணன்)

அன்பிலே சிறந்தும் பண்பிலே உயர்ந்தும் அறிவு உடையவனாய் வளர்ந்தும் தமிழர் தன்மானத்துடன் வாழ, தமிழ் மண்ணுக்காக வீரவேங்கையாய் நின்று இன்னுயிர் நீத்த உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம், மத்தி

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(B-2045)

செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்.

சங்க உறுப்பினர்களுக்கான

## அறிவித்தல்

1. மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2. 1991/92 ஆம் ஆண்டுக்கான சங்க அலுவலர், செயற்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட விரும்பும் உறுப்பினர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் வேட்பு மனுப் படிவத்தில் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். வேட்பு மனுக்கள் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை காலை 10-00 மணிமுதல் நண்பகல் 12-00 மணிவரை சங்க அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். படிவம் ஒன்றுக்கு ரூபா 5-00 செலுத்தி வேட்பு மனு படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

   வேட்பு மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் 1991-03-18 ஆம் திகதி பிற்பகல் 01 மணி தொடக்கம் 02 மணிவரை ஏற்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

3. பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்பட இருக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தல் 1991-03-10 ஆம் திகதிக்கு முன் கிடைக்க வேண்டும்.

4. நடப்பாண்டிற்கான தங்கள் சந்தாப் பணத்தை இதுவரையும் செலுத்தாத உறுப்பினர்கள் 1991-03-10

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

| | | | |
|---|---|---|---|
| கலைமாணி | B. A. | 1991 | டிசம்பர் |
| விஞ்ஞானமாணி | B Sc | 1991 | டிசம்பர் |

அண்மையில் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் சுட்டிலக்கத்துடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B- 2042)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 27 | | 21 |
| — | | — |
| 09 |  | 11 |
| — | | — |
| 1968 | | 1990 |

### லெப்ரினன்ட் தம்பி
### (கந்தசாமி தம்பி, மயிலிட்டி)

மண்ணுக்காய் மரணித்த
   மாதவச் செல்வனடா
விண்ணுக்குச் சென்றுவிட்ட
   வீரப் புதல்வனடா
செம்பரிதி இவன் வரவு கண்டு
   செங்கொடியாய் மாறுமடா
பைம்பொன் புலித்தேரில் ஏறி
   பரலோகம் செல்கின்றானடா
பாரினில் இவன் பிறந்து
   பத்தொடு பதின்மூன்று ஆண்டடா
போரில் தச்சன்காட்டிலே தம்பி
   தமிழ்மண்ணைக் காத்தானடா!

பிரிவால் துயருறும்

(B-2040) பெற்றோர், சகோதரர், பேத்தி.



இறுதிச் சடங்கிலை கலந்துகொண்டு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து உதவிய வவுனியாப் பகுதி தபால் தொலைத்தொடர்புத் திணைக்களப் பணியாளர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**அந்தியேட்டிக் கிரியை**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 24-02-1991 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். சகலரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்!

இக்கம்,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

நண்பர் ஏும்,
குடும்பத்தினரும்.

(R/1112)

## வட ஈழம் சிகை அலங்காரிப்பாளர்
## சங்க முக்கிய அறிவித்தல்

எமது இளைச் சங்கங்கள் தன்னிச்சையாக அங்கத்தவர்களிடம் சந்தாப் பணம் வசூலிப்பதில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

மாதாந்தச் சந்தா: நிலையங்களுக்கு ரூ 25/-தும் தனிநபருக்கு ரூ 15/-தும் ஆகும் இதனைவிட கூடவோ குறையவோ அறவிட வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.

கௌரவ செயலாளர்
சிகை அலங்காரிப்பாளர் சங்கம்
வட ஈழம்

(B-2048)

1. மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2. 1991/92 ஆம் ஆண்டுக்கான சங்க அலுவலர், செயற்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட விரும்பும் உறுப்பினர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் வேட்பு மனுப் படிவத்தில் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். வேட்பு மனுக்கள் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை காலை 10-00 மணிமுதல் நண்பகல் 12-00 மணிவரை சங்க அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். படிவம் ஒன்றுக்கு ரூபா 5-00 செலுத்தி வேட்பு மனு படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

வேட்பு மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் 1991-03-18 ஆம் திகதி பிற்பகல் 01 மணி தொடக்கம் 02 மணிவரை ஏற்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

3. பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்பட இருக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தல் 1991-03-10 ஆம் திகதிக்கு முன் கிடைக்க வேண்டும்.

4. நடப்பாண்டிற்கான தங்கள் சந்தாப் பணத்தை இதுவரையும் செலுத்தாத உறுப்பினர்கள் 1991-03-10 ஆம் திகதிக்கு முன்பதாகச் செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம்

கௌரவ செயலாளர், யாழ் கிளை,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(B. 2050)

மண்ணுக்காய் மரணித்த
வீரச் செல்வனடா

விண்ணுக்குச் சென்றுவிட்ட
வீரப் புதல்வனடா

செம்பரிதி இவன் வரவு கண்டு
செங்கொடியாய் மாறுதடா

பைம்பொன் புலித்தேரில் ஏறி
பரலோகம் செல்கின்றானடா

பாரினில் இவன் பிறந்து
பத்தொடு பதின்மூன்று ஆண்டடா

போரில் தச்சன்காட்டிலே தம்பி
தமிழ்மண்ணைக் காத்தானடா!

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர், பேத்தி.

(B-2040)



## நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 21

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**லெப். சுருளி** (முருகன் சிவராசா - கரவெட்டி)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆங்கில ஆதிக்கம் அகல
அவ்விடத்தில் வந்தமர்ந்த
சிங்கள ஆதிக்கக் கொடுமையை
துடைத்து அழிப்பதற்கே
வேங்கைகள் படையில் புகுந்து
வீரப் போர் புரிந்து வந்தீர்!
எங்கள் மனங்களில் நிறைந்துவிட்டீர்!!
மரணத்தை வென்று விட்டீர்!!!

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B 2054

## ஆரம்பமாகிவிட்டது!

**SHORTHAND TYPING CLASSES**
**PITMAN - LONDON EXAM**

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peter's Lane, Hospital Road, **JAFFNA.**

(B-2041)

## கால் நடைகளும் பலி; கொள்ளை

(வவுனியா)

வவுனியாவில் கடந்த வார இராணுவ நடவடிக்கையின் போதும், குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலின் போதும் நூற்றுக்குமேற்பட்ட கால் நடைகள் இறந்துள்ளன.

தவிர, தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து சென்றபின்பு, இராணுவத்தினரால் பல ஆடுகளும், கோழிகளும் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (ஜ)

✽ சிந்தனைக்கு ✽

கண்ணீர் பலவீனத்தின் அறிகுறியல்ல. வலிமையின் அறிகுறி பத்தாயிரம் நாக்குகளை விட, பண்பட்ட சொல்வன்மை கொண்டது;

— வாஷிங்டன் இர்விங்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-02-1991
தொலைபேசி
அலுவலகம்: 023 - 2539 நிர்வாகப்பிரிவு: 1288
குரல் 63


## அன்னையரின் கண்ணீரில் அரசியல்வாதிகள் லாபம்....?

தமது பிள்ளைகளுக்கும், கணவன்மாருக்கும் என்ன நடந்தது என்பதை அறிவதற்காக அரசாங்கத்திடம் தெளிவான பதில் கோரி அன்னையர் முன்னணியினர் பெரும் போராட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளனர். இப்போராட்டத்தில் அரசாங்கத்தினை அடக்குமுறையினாலும், காணாமல் போனவர்களின் தாய்மார்களும், மனைவிமார்களும், அவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

தென்னிலங்கையில் சிறிலங்கா அரசின் படுகொலைகளைக் கண்டித்து அன்னையர் முன்னணியினர் மேற்கொள்ளும் போராட்டம் வரவேற்கத்தக்கது. அதேவேளை சிறிலங்கா அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை. இதனை சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளே தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. பொலிஸ் இராணுவம் ஆகியவற்றை உஷார் நிலையில் வைத்திருப்பதும், குழப்பத்தைத் தூண்ட குண்டர்கள் சேர்த்துக் கொண்டிருப்பதும் என்ற போர்வையில் அன்னையர் முன்னணியினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை தமது மாநாட்டிற்கு அன்னையர் முன்னணியினர் வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்திருந்தமை வரவேற்கத்தக்க விடயம் ஒன்றாகும்.

ஆனால், அன்னையர் முன்னணியினரின் அரசுக்கெதிரான போராட்டங்களில் அரசியல்வாதிகளின் தலைகள் தெரிவது அன்னையர் முன்னணி தனித்துவமான நிலையில் தொடர்ந்து இயங்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த அன்னையர் முன்னணியினரின் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கலந்து கொண்டுள்ளார். இந்த அரசியல் தலைவர்களின் ஒரே இலட்சியம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதே. இதற்காக இவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள்.

இந்நிலையில் இவர்கள் அன்னையர் முன்னணியினரின் போராட்டத்தை தமக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இதன் மூலம் அன்னையர் முன்னணியினர் எதிர்காலத்தில் தமது இலக்கை [illegible]

# தடுப்பூசிகளின் முக்கியத்துவமும் போடாவிடின் வரும் பிரச்சினையும்

— டாக்டர் சிவமாறன்

மருத்துவத்துறையின் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்று "நோய் ஏற்பட முன்பு தடுத்தலாகும்"! இது மருத்துவரீதியாகவும் உடல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆரோக்கியமான செயற்பாடாகும்.

மனித உடலில் இயற்கையாகவே நோயை எதிர்க்கும் சக்தி இருக்கின்றது. ஆனால் குழந்தை ஒன்று பிறந்தவுடன் அதற்குரிய எதிர்ப்புச்சக்தி தாயின் வயிற்றில் பத்து மாதங்கள் இருக்கும் போது தாயின் இரத்தத்தினால் கொடுக்கப்பட்ட சக்தியும், பின்பு தாய்ப்பாலின் மூலம் கொடுக்கப்படுகின்ற சக்தியுமாகும். இது பின்வரும் தொற்றுநோய்களிலிருந்து குழந்தையைக் காப்பாற்ற அறவே போதாது.

உதாரணமாக: 1) கசநோய் (T.B) (2) ஏற்புவலி (Tetanus) (3) போலியோ (Polio) 4 ஒரு இழுப்பு வியாதி (Diphtueria) (5, கூவைக்கட்டு (Measles) ஆகியவியாதிகள்.

இக்கொடிய நோய்களிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றவே குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடப்படுகின்றது.

**தடுப்பூசி ஆரம்பிக்கப்பட்டது எப்படி?**

பதினெட்டாம் நூற்றாண்டில் துருக்கி நாட்டில் பணிபுரிந்த பிரித்தானிய நாட்டின் தூதுவரின் மனைவியான மேரி வோட்லி மொன்டேகு அம்மையார், அப்போதிருந்த சின்னம்மையின் Small pox) கொப்பளங்களிலிருந்து பதார்த்தத்தை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து அங்குள்ள குழந்தைகளுக்குக் கொடுத்த போது பல குழந்தைகளுக்கு வியாதி ஏற்பட்டு இறந்துவிட்டன. அதன்பின்பு 1798ல் எட்வர்ட் ஜென்னர், மாடுகளுக்கு வரும் அம்மை நோயிலிருந்து 'சீரம்' என்கிற பதார்த்தத்தை குழந்தைகளுக்குக் கொடுத்து சின்னம்மை (Small pox) நோய் ஏற்படுவதைத் தடுத்தார். இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே உலகின் மூலை முடுக்குகளிலிருந்து சின்னம்மை முற்று முழுதாக அழிக்கப்பட்டுவிட்டது. இது மருத்துவத்துறைக்கு சர்வதேச ரீதியில் கிடைத்த மிக பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

**தடுப்பூசி போடுவது பெற்றோர்களின் கடமை**

குழந்தையொன்றைப் பேணிப் பராமரிப்பது பெற்றோர்களின் தலையாய கடமை.

எனவே தத்தமது குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பொருத்தமான தடுப்பூசியைப் போட்டு அவர்களுக்கு முன்பு கூறிய கொடிய நோய்கள் வராமல் பார்த்துக்கொள்வது மிக முக்கியமான கடமையாகும். இக்கடமையில் தவறின் அங்கவீனமான, குறைபாடுள்ள, பலவீனமான வருங்கால சந்ததியை உருவாக்குவதில் இவர்களும் பொறுப்பேற்க வேண்டும். ஒரு நல்ல ஆரோக்கியமான எதிர்காலசந்ததியாக உங்கள் குழந்தைகள் உருவாக, இன்றே உங்கள் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டு, கொடிய நோய்களிலிருந்து உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்.

தடுப்பூசியைப் பேணிப்பாதுகாப்பதற்குக் குளிர்சாதனப் பெட்டி மிகவும் அவசியமென்பதால், இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில், மின்சார மற்றும் போக்குவரத்து வசதியின்மையால்பல சிறுசிறு மருத்துவ மனைகளில் எல்லாம் தடுப்பூசி இல்லாமல் போய்விட்டது. மேலும் வடகிழக்கு மாகாணங்களுக்கு மிக்குறைந்த அளவிலேயே மேற் கூறிய தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்படுவதால் அதுவும் பெரும்தட்டுப் பாட்டில் உள்ளது. இருந்தாலும் மின்சார வசதிகொண்ட யாழ். போதனாவைத்தியசாலையில் தடுப்பூசி இருப்பதால் இதுவரை தமது குழந்தைகளுக்கு தடுப்பூசி போடாதவர்கள் இன்றே உங்களது குழந்தைகளைக் கொண்டு சென்று தடுப்பூசியைப் போடுங்கள்.

## தடுப்பூசிகள் போடுகின்ற முறை

| வயது | போடவேண்டிய தடுப்பூசி | போடாவிடின் ஏற்படும் ஆபத்து |
|---|---|---|
| (1) பிறந்தவுடன் | பி. சி. ஜீ | கசநோய் |
| (2) மூன்றுமாதம் | டிப்த்திரியா, பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ (முதலாவது ஊசி) | இழுப்பு நோய், இருமல், ஏற்புவலி, போலியோ |
| (3) ஐந்து மாதம் | டிப்த்திரியா பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ (இரண்டாவது ஊசி) | இழுப்பு நோய், ஒருவகை இருமல், ஏற்புவலி, போலியோ |
| (4, ஏழு மாதம் | டிப்த்திரியா, பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ மூன்றாவது ஊசி) | இழுப்புநோய், ஒருவகைஇருமல், ஏற்புவலி, போலியோ |
| (5) 13 - 15 மாதம் | கூவைக்கட்டு ஊசி | கூவைக்கட்டு |
| (6) பாடசாலைக்குப்போகத் தொடங்கும்போது | டிப்த்திரியா, ஏற்புவலி, போலியோ | இழுப்பு நோய், ஏற்புவலி, போலியோ. |

...தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. பொலிஸ் இராணுவம் ஆகியவற்றை உஷார் நிலையில் வைத்திருப்பதும், குமார் பத்மநாப தூண்டல் குழுக்கள் கேந்திரங்களைக் குறிவைக்கின்றன என்ற போர்வையில் அன்னையர் முன்னணியினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை தமது மாநாட்டிற்கு அன்னையர் முன்னணியினர் வெளிநாட்டுத் தூதரகங்களை அழைத்திருந்ததை அரசு வெறுப்பதற்கு விடயம் ஒன்றாகும்.

ஆனால், அன்னையர் முன்னணியினரின் அரசுக்கு எதிரான போராட்டங்களில் அரசியல்வாதிகளின் தலைகள் தெரிவது அன்னையர் முன்னணி தனித்துவமான நிலையில் தொடர்ந்து இயங்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த அன்னையர் முன்னணியினரின் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கலந்து கொண்டுள்ளார். இந்த அரசியல் தலைவர்களின் ஒரே இலட்சியம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதே. இதற்காக இவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள்.

இந்த நிலையில் இவர்கள் அன்னையர் முன்னணியினரின் போராட்டத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுவிடுவார்கள். இதன் மூலம் அன்னையர் முன்னணியினர் எதிர்காலத்தில் தமது இலக்கைவிட்டு விலகிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடலாம்.

அத்தோடு, படுகொலைகளுக்கும், கடத்தல்களுக்கும் காரணமாகவிருந்த ஐக்கிய தேசிய கட்சியும், அன்னையர் முன்னணியினரின் போராட்டத்திற்கு ஊடாக அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அதிகாரத்தைப் பாதுகாக்க முயற்சிப்பதில் ஐக்கியதேசியக் கட்சியினருக்குச் சற்றும் சளைத்தவர்கள் இல்லை என்பதையும் அன்னையர் முன்னணியினர் -1971ஆம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது பதினையாயிரத்திற்கும் இருபதாயிரத்திற்கும் இடைப்பட்ட சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டார்கள்- என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்தோடு, 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிறீலங்கா இராணுவத்தினர் தமிழர் பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அடக்குமுறையினால் பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் ஆண் பெண் வேறுபாடோ, வயது வேறுபாடோ இன்றி கொலை செய்யப்பட்டதை கண்மூடிப் பார்த்துக் கொண்டிருந்ததில் வெளிப்பட்டே இவை என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நிலையில், அன்னையர் முன்னணியினர் தமது அரசுக்கு எதிரான போராட்டத்தை அரசியல் கட்சிகள் உட்புகுந்து திசை திருப்பி விடாமல் பாதுகாத்துக்கொள்வதோடு, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுப்பதின் மூலமே தமது போராட்ட இலட்சியத்தை வெற்றி கொள்ள முடியும் என்பதை கூறிவைக்க விரும்புகிறோம்.

---

...ஏற்படும்?

பதினெட்டாம் நூற்றாண்டில் துருக்கி நாட்டில் பணி...

...எனவே தத்தமது குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பொருத்தமான தடுப்பூசியைப்...

...தடுப்பூசி போடாதவர்கள் இன்றே உங்களது குழந்தைகளைக் கொண்டு சென்று தடுப்பூசியைப் போடுங்கள்.

## தடுப்பூசிகள் போடுகின்ற முறை

| வயது | போடவேண்டிய தடுப்பூசி | போடாவிடின் ஏற்படும் ஆபத்து |
|---|---|---|
| (1) பிறந்தவுடன் | பி. சி. ஜீ | க்ஷயநோய் |
| (2) மூன்றுமாதம் | டிப்த்தீரியா, பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ (முதலாவது ஊசி) | இழுப்பு நோய், இருமல், ஏற்புவலி, போலியோ |
| (3) ஐந்து மாதம் | டிப்த்தீரியா பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ (இரண்டாவது ஊசி) | இழுப்பு நோய், ஒருவகை இருமல், ஏற்புவலி, போலியோ |
| (4) ஏழு மாதம் | டிப்த்தீரியா, பேர்ட்டஸ்ஸிஸ் ஏற்புவலி, போலியோ மூன்றாவது ஊசி) | இழுப்புநோய், ஒருவகைஇருமல், ஏற்புவலி, போலியோ |
| (5) 13 - 15 மாதம் | கூவைக்கட்டு ஊசி | கூவைக்கட்டு |
| (6) பாடசாலைக்குப்போகத் தொடங்கும் போது | டிப்த்தீரியா, ஏற்புவலி, போலியோ | இழுப்பு நோய், ஏற்புவலி, போலியோ |

# சுகாதாரச் சீர்கேட்டை நீக்க 50 இலட்சம் ரூபா தேவை

யாழ். மாநகர சபையின் சுகாதாரச் சீர்கேட்டைச் சீர்திருத்தவும் விமானத் தாக்குதல்களால் சேதமடைந்த கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கும் என உடனடியாக ஐம்பது இலட்சம்ரூபா தேவை என வலியுறுத்தி யாழ் மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் யாழ் அரச அதிபர் ஊடாக அத்தியாவசிய சேவைகள் அமைச்சுக்குக் கடிதம் வரைந்துள்ளார்.

இக்கடிதம் குறித்து ஆணையாளர் நேற்று விளக்கமளிக்கையில் யாழ். மாநகர எல்லைக்குள் தொடர்ச்சியாகப் பல மாதங்கள் அகற்றப்படாத குப்பை மேடுகள் காணப்படுகின்றன. அதேவேளை இடிபாடுகளும் ஆங்காங்கே மதிய நகரப்பகுதிக்குள் குவித்து வைக்கப் பட்டுள்ளன. இவற்றை உடனடியாகஅகற்ற வேண்டும். மாநகர சபை எல்லைகுள்குப்பைகூளங்கள் அகற்றப்படாததால் நகர்ப்பகுதிச் சூழல் தொடர்ந்தும் மோசமான நிலைமையை அடைந்து வருகிறது இவ்வாறு சேரும் குப்பை கூளங்களை அகற்ற எமக்கு மாதாந்தம் பத்து பீப்பாய் வண்டி எண்ணெய் (டீசல்) தேவை எனவும் தற்போது வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடியாமையால்எமது சொந்த வாகனங்களையேபயன்படுத்த வேண்டி உள்ளது என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார்.

(லோ)

# 1990 இல் சாவகச்சேரியில் 1339 பேர் காயங்களுக்கு சிகிச்சை

(செ. த. மை)

1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் போர் விமானங்கள்' உலங்கு வானூர்திகள் மற்றும் வாகன விபத்துக்கள் காரணமாக, சாவகச்சேரியில் மாவட்ட வைத்தியசாலையில் 1339 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாக வைத்திய சாலை பதிவு ஏடுகள் தெரிவிக்கின்றன.

மலேரியா நோய்க்காரணமாக 1 060 பேர்சிகிச்சை பெற்றுளனர். தற்போது மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் நாய் கடிக்கு உள்ளாகி ஊசி மருந்து ஏற்றபலர் அணுகிய போதும், ஊசி மருந்து இன்மையால் 12 பேர்களுக்கு மட்டுமே விசர்நாய் கடிக்கு ஊசிமருந்து ஏற்றப்பட்டதாகவும், இப்பகுதியில் விசர் நாய்கடியால் ஒருவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை 908 நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதாக மிருக வைத்தியர் தெரிவிக்கின்றார்.

சோவியத் சமாதானத் திட்டம்

# வாஷிங்டனைக் கொஞ்சமும் திருத்திப்படுத்துவதாக இல்லையாம்

(வாஷிங்டன்)

"சோவியத்யூனியனின் சமாதானத்திட்டம் வாஷிங்டனின் தேவைகளை கொஞ்சமும் நிறைவு செய்வதாக இல்லை" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

கிரெம்ளினின் சமாதானத் திட்டம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் ஜோர்ஜ்புஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் கூட்டுப் படைகளின் போர் நோக்கங்களைத் தணித்துக்கொள்ளும் எந்த நடவடிக்கைகளையும் அமெரிக்கா ஏற்காது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் குவைத்தில் ஏற்பட்ட போர் இழப்பு ஈட்டுத்தொகையை ஈராக்கிடம் வாஷிங்டன் கோரும் என்றும், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தொடர்ந்து பதவியில் இருந்தால் ஈராக் மீது ஆயுதத்தடை விதிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திரு. த. இராசலிங்கம

(உடுப்பிட்டித்தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு த இராசலிங்கம் காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பதிமலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராசேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா (ஆசிரியர்), தங்கராசா, திரு துரைராசா ஆசிரியர்), திருமதி மீனாட்சியம்மா சாம்பசிவம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற டாக்டர் சாம்பசிவம் திரு. க. தருமராசா ஆகியோரின் மைத்துனரும் திரு. செ செல்வலிங்கம் (கிராமசேவையாளர்), செ. சந்திரலிங்கம ஜேர்மனி), செ ஆனந்தலிங்கம் (கனடா), த யோகலிங்கம் (கல்கத் திணைக்களம் கொழும்பு) த அசோகலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), து.சத்தியலிங்கம் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), செ சோதிலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), செல்வி இரஞ்சனிதேவி துரைராசா (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் சிறியதந்தையாரும், திரு. வே. தம்பிமுத்துவின் மருமகனும், திரு ச. ஸ்ரீதரன் (மக்கள் வங்கி பளங்குளம்), திரு. மா. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மாமனாரும், டாக்டர் க. வல்லிபுரம், திரு. இ. சுந்தரவனம் (பொதுச் சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற இ இரத்தினராசா (ஆசிரியர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (21 - 02 - 91) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

"ராஜ்மஹால்"
அல்வாய்த் தெற்கு,
அல்வாய்.

- குடும்பத்தினர்
தகவல்: செ சே திலீபன்
(R-1126)

### திருமதி கனகசபை கண்மணி

## இலவச கைத்தொழில் பயிற்சி

சிறுபிள்ளை வாதநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஜெயப்பூர் செயற்கைக்கால் பாவனையாளர்களுக்கும் மூன்று மாத கால இலவச சிறுகைத்தொழில் பயிற்சித் திட்டம் ஒன்று ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகம் ஆரம்பிக்கவுள்ளது.

பயிற்சி பெற விரும்புவோர் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பத்துடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளும்படி மேற்படி தொழிலகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க)

## இன்று நினைவுச் சொற்பொழிவு

(நமது நிருபர்)

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இடம்பெறும் நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு இன்று காலை பத்து மணியளவில் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் - புதிய நோக்கு" என்ற தலைப்பில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி.புஷ்பரட்ணம் இங்கு உரையாற்றவுள்ளார்.

## தூண்டிலில் அகப்பட்ட சைக்கிள்

(செ. த. மை.)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயக் கேணியில் நேற்று முன் தினம் மீன் பிடிக்க தூண்டில் போட்ட ஒருவருக்கு, புத்தம் புதிய ரலி சைக்கிள் பிடிபட்டது. தெல்லிப்பழையிலிருந்து

## 35 ஆம் நாள் போர்

★ இத்தாலி வளைகுடா யுத்த ஓய்வுக்கான சோவியத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் அணியைச் சேர்ந்த நாடுகளின் முதன் முதலாக சோவியத் ரஷ்யாவின் போர் ஓய்வுத் திட்டத்தை ஆதரித்த நாடு இத்தாலியாகும்.

★ வளைகுடாவில் தரைப்படைத் தாக்குதலைத் தவிர்க்க இது ஒரு அரிய சந்தர்ப்பம். வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சந்தர்ப்பத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நிராகரித்துவிடமாட்டார் எனத் தாம் நம்புவதாகவும் ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குவேயர் மாஸ்கோவில் சமாதான திட்டம் பற்றி கருத்து வெளியிடுகையில் கூறியுள்ளார்.

★ குவைத்தில் இருந்து ஈராக் நிபந்தனையற்ற முறையில் விலகுவதற்கு மொஸ்கோ பேச்சுக்கள் வழிவகுக்குமானால் அதனை நாம் வரவேற்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சி. என். என்னுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் நமது இக்கருத்தைத் தெரிவித்தார்.

★ சோவியத் யூனியனின் சமாதான திட்டத்திற்கு ஈராக்கின் பதில் தெரியும் வரை அமெரிக்கா தரைத் தாக்குதல் நடத்தக்கூடாது என சோவியத் யூனியனின் ஜனாதிபதி கொர்பசேவ் கோரிக்கை விடுத்துள்ளார்.

★ வளைகுடா யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு மத்திய கிழக்கு சமாதான மாநாடு உடன் கூட்டப்படல் வேண்டும் என்று உலக திருச்சபையின் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

★ அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையும், குறிப்பிட்ட சில அரபு நாடுகளின் தலைவர்களையும் கொலை செய்வது சகல முஸ்லிம்களினதும் மதக் கடமையாகும்" என ஈராக்கிய உலமாக்கள் அறிவித்துள்ளனர்.

★ ஜப்பானின் வளைகுடா சம்பந்தமான கொள்கை பற்றி ஆராய பிரதமர் கைபூ இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் தூதுவர்களை அனுப்பி வைக்க உள்ளார்.

★ வளைகுடா யுத்தம் மூண்ட பின்னர் ஈராக்கிய எல்லைகளை கடந்து வரும் ஈராக்கிய அகதிகளை ஈரான் பராமரித்து வருகிறது. மேலும் ஒரு இலட்சம் அகதிகளைப் பராமரிக்க தயாராக இருப்பதாக ஈரான் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

★ குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறினால் அங்கு ஐ. நா. சபையின் அமைதிப்படையினை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கென நான்கு உறுப்பினர் அலுவல் குழுவொன்றை ஐ. நா. சபை ஒழுங்கு செய்துள்ளது

## உ. கூ. அ. அலுவலகங்களில் பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில் உதவி அரச அதிபர்களின் அலுவலகங்களில் பல பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்

பல ஊழியர்கள் இளைப்பாறிச் சென்றதாலேயே இவ் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் யாழ். செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களை அவ்விடங்களுக்கு இடமாற்றம் செய்யவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## மலிவு விலை மதுவை எலிப்பாஷாணமாக சிபார்சு?

பாராளுமன்ற உறுப்பினர்)

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. இராசலிங்கம் காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பத்மலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராசேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா (ஆசிரியர்), தங்கராசா, திரு துரைராசா (ஆசிரியர்), திருமதி மீனாட்சியம்மா சாம்பசிவம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற டாக்டர் சாம்பசிவம் திரு. க. தருமராசா ஆகியோரின் மைத்துனரும் திரு. செ. செல்வலிங்கம் (கிராமசேவையாளர்), செ. சந்திரலிங்கம் (ஜேர்மனி), செ. ஆனந்தலிங்கம் (கனடா), த. யோகலிங்கம் (கல்வித் திணைக்களம் கொழும்பு) த. அசோகலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), து. சத்தியலிங்கம் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), செ. சோதிலிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்), செல்வி இரஞ்சனிதேவி துரைராசா (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் சிறிய தந்தையாரும், திரு. வே. தம்பிமுத்துவின் மருமகனும், திரு. ச. ஸ்ரீதரன் (மக்கள் வங்கி பரங்குளம்), திரு. மா. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மாமனாரும், டாக்டர் க. வல்லிபுரம், திரு. இ. சுந்தரவனம் (பொதுச் சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற இ. இரத்தினராசா (ஆசிரியர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (21-02-91) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

"ராஜ்மகால்" - குடும்பத்தினர்
அல்வாய் தெற்கு, தகவல்: செ. சே. திலீபன்
அல்வாய். (R-1126)

## திருமதி கனகசபை கண்மணி

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கனகசபை கண்மணி காலமாகி விட்டார். இவர் பொன்னர் கனகசபையின் அன்பு மனைவியும், தில்லையம்பலம், கனகம்மா, இலைநடேசன் புவனேஸ்வரி, மகேந்திரன், ரோகிணி, ராதாகிருஷ்ணர் ஆகியோரின் அன்புத்தாயாரும், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, யோகேஸ்வரி, அருணாசலம் யோகேஸ்வரி, மகேந்திரன் வனஜாமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21-02-91 வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் நயினாதீவு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(R-1124) க. தில்லையம்பலம்

## திரு. வைத்திலிங்கம் விசுவலிங்கம்

வைத்திலிங்கம் விசுவலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற தையல்நாயகியின் கணவரும், அநுராசன் ஜெகதீசன், காலஞ்சென்ற ஜெகரட்சகன், ஞானேஸ்வரி, யோகேஸ்வரன், ஜீவரட்சகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தருமபூபதி, கமலாசினி, யோகேஸ்வரி, இரத்தினசிங்கம், சரோஜா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அளவெட்டி வடக்கில் அன்னாரது இல்லத்தில் 20-02-91 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெற்று நல்லடக்கம் குடும்பமயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
"ஆரணியம்", வி. அநாகரட்சகன்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (B-2050)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தெரிவித்துள்ளார். (க)

## இன்று நினைவுச் சொற்பொழிவு

(நமது நிருபர்)

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை யொட்டி இடம்பெறும் நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு இன்று காலை பத்து மணியளவில் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் - புதிய நோக்கு" என்ற தலைப்பில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. புஷ்பரட்ணம் இங்கு உரையாற்றவுள்ளார்.

## தூண்டிலில் அகப்பட்ட சைக்கிள்

(செ. த. மை.)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயக் கேணியில் நேற்று முன்தினம் மீன் பிடிக்க தூண்டில் போட்ட ஒருவருக்கு, புத்தம் புதிய ரலி சைக்கிள் பிடிபட்டது.

தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயி லிருக்கும் சுப்பிரமணியம் என்பவர் போட்ட தூண்டிலிலேயே சைக்கிள் அகப்பட்டது. இவர் இந்தச் சைக்கிளை, மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கரிடம் ஒப்படைத்துள்ளார்.

### நிவாரணம்

ஆகிய பகுதிகளிற்கு காசோலையாக இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் நூறு பேருக்கு நாலாயிரம் ரூபாவும், ஐந்நூறு பேருக்கு ஆயிரம் ரூபாவும் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் வண்ணார்பண்ணை வடமேற்கு, வடகிழக்கு கந்தர்மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 152 பேருக்கு ஆயிரம் ரூபாவும், 69 பேருக்கு நாலாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக அப் பகுதிகளின் வங்கி முகாமையாளர்கள் அறிவித்துள்ளார்கள். (ம)

### மன்னாரில்

குறிப்பிடத்தக்கது:

மேற்படி இராணுவ உத்தரவைத் தொடர்ந்து மன்னார் பகுதியில் உப்பின்விலை கிலோ 15 ரூபா வாகியுள்ளது மேலும் போக்குவரத்து சிரமம் காரணமாக பிடிபடும் மீன்களில் பெருமளவானவை கருவாடாக்க வேண்டிய நிலையில் இருக்கும் மீனவர்கள் உப்புத் தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

★ ஜப்பானின் வளைகுடா சம்பந்தமான கொள்கை பற்றி ஆராய பிரதமர் கைபூ இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் தூதுவர்களை அனுப்பி வைக்க உள்ளார்.

★ வளைகுடா யுத்தம் மூண்ட பின்னர் ஈரானிய எல்லைகளை கடந்து வந்த ஈராக்கிய அகதிகளை ஈரான் பராமரித்து வருகிறது. மேலும் ஒரு இலட்சம் அகதிகளைப் பராமரிக்க தயாராக இருப்பதாக ஈரான் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

★ குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறினால் அங்கு ஐ. நா. சபையின் அமைதிப்படையினை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கென நான்கு உறுப்பினர் அலுவல் குழுவொன்றை ஐ. நா. சபை ஒழுங்கு செய்துள்ளது.

## உ. கூ. அ. அலுவலகங்களில் பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில் உதவி அரச அதிபர்களின் அலுவலகங்களில் பல பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

பல ஊழியர்கள் இளைப்பாறிச் சென்றதாலேயே இவ் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் யாழ். செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களை அவ்விடங்களுக்கு இடமாற்றம் செய்யவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## மலிவு விலை மதுவை எலிப்பாஷாணமாக சிபார்சு?

(சென்னை)

பொலித்தீன் பைகளில் சப்ளை செய்யப்படும் மலிவு விலை மது எலிகளைக் கொல்ல பயன்பட்டது: தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேட்டைக்காரனிருப்பு, வெள்ளைப்பள்ளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது வயல்களில் ஏராளமான எலிகள் இறந்து கிடந்ததைக் கண்டனர். இவ் எலிகள் மலிவுவிலை மதுவைக் குடித்தமையினாலேயே மரணமானதாக தெரியவந்துள்ளது.

மலிவுவிலை மதுவானாலும் எலிகளைக் கொலைப் போதுமானது எனப்படுவதால் எலிகளைக் கொல்ல இம்முறையை தொடரலாமென விவசாயத் துறையினர் ஆராய்வதாக தெரிகிறது.

### வழக்கறிஞர்

களை இபககத்தினருக்கு ஆஜராக அல்லது அவர்களுடன் தொடர்புகொள்ள பொலிஸார் தன்னைத் தடுப்பதாகத் தெரிவித்த மனுதாரர் பொலிஸார் தன்னை இரண்டுமுறை கூட்டிச்சென்று விசாரித்ததாகவும் தனது சுதந்திரத்தில் தலையிடுதலில் இருந்து அதிகாரத்திலுள்ளவர்களைத் தடுக்குமாறும் அவர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

### ஓலைத்தொடுவாய்

வந்த இராணுவ அணி ஒன்றின் மீது ஓலைத்தொடுவாய் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதுடன் ரி 81 ரக துப்பாக்கி 1, மகசீன் 5 ஐ. எம். ரவைகள் 350, 203 ரக பிஸ்ரல் 1 ஆகிய ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதுடன் கொல்லப்பட்ட சிப்பாயின் உடலும் புலிகளால் மீட்கப்பட்டது.

### ஷெல் தாக்கு

ஷெல் தாக்குதல் கடந்த சில நாட்களாக தீவிரமடைந்துள்ளது. குறிகாட்டுவான் துறையை நோக்கியே பெரும்பாலும் இத்தாக்குதல் நடாத்தப்படுகிறது.

இதேவேளை இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கடலில் ரோந்து சுற்றித்திரியும் கடற்படையின் விசைப்படகுகளில் இருந்தும் குறிகாட்டுவான், இறுப்பிட்டி, கண்ணகை அம்மன் கோயிலடி, சோளியாவடி ஆகிய கரையோரப்பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல் நடாத்தப்படுவதும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (32)

### ஆயிரக்கணக்கில

பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு இறுதியில் அடம்பனில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இறுதியில் வீரவேங்கைகளின் புகழுடல்கள் எடுத்துச்செல்லப்பட்டு மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ம)

### காங்கிரஸ்

யார் மதுதண்டவதே ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

இதே வேளையில் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் முரளி மனோகர் ஜோஷியும் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.